**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**
**C.C. No. 135/2019 PW .5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | முகமது தாரிக்குல் அமீன், | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் : | | தாலுகா | : |
| வயது : | | தொழில் | : ஆய்வாளர் |
| ஜாதி : | | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**(சாட்சியத்தின் சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்பட்டது)**

**11.02.2026 முதல் விசாரணை:**

**1.** நான் தற்சமயம் காரைக்குடியில் தெற்கு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2013ம் தேதி 17.00 மணிக்கு எஸ்.வி மங்களம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளாராக நிலைய பொறுப்பில் இருந்த போது மணக்குடி கிராமத்தை சேர்ந்த துரைச்சாமி மகன் சேதுராமன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று எஸ். வி மங்கல காவல் நிலைய குற்ற எண் 57/13 பிரிவு, 304A இதச பிரகாரம் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை நிமித்தமாக எஸ்.வி மங்கல காவல் நிலைய ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ( **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. சம்பவ தினத்தன்று காலையிலிருந்து நான் பணியில் இருந்தேன். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் 3 கி.மீட்டார் தூரம் வருவதை பொறுத்து உள்ளது. காவல் நிலையத்திலிருந்து சிங்கம்புணரி அரசு மருத்துவமனை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 5 கீ.மீட்டர் தூரம் உள்ளது. சம்பவம் நடந்து 2 மணி நேரம் கழித்து பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 2 மணி நேர காலதாமத்திற்கு விளக்கம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து வழக்குகளில் மருத்துவமனையில் இருந்து தகவல் வரும் என்றால் சரிதான். அவ்வாறு தகவல் வரும் போது சுமார்

16.00 மணிக்கு கிடைத்தது. காவலர்கள் தகவல் கிடைத்ததும் மருத்துவமனைக்கு செல்லவில்லை. அதற்குள் புகார்தாரர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார். சம்பவ இடத்திற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர் காவலர்கள் சென்றார்கள். புகார் எழுதி கொண்டுவரப்பட்டது. புகார்தாரர் உறவினர்களுடன் காவல் நிலையத்திற்கு வந்தார். புகார்தாரர் வரும் போது அவர் வந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அவர் உடம்பிலோ, ஆடைகளிலோ இரத்த கறை இருந்ததா என்றால் ஞாபகமில்லை. நான் சொல்வது போல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் பெறப்பட வில்லை என்றால் சரியல்ல. நாங்கள் மேற்படி புகாரை பொய்யாக புனைந்து புகார்தாரரிடம் கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல.